1992 ஏப்ரல் 9]

532—

காலநடை மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றுதல்.

*2144— திரு. ஜி. பழனிசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர்நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் செயல்பட்டுவரும் கால்நடை மருந்தகத்தை மருத்துவமனை யாக மாற்றுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த மருந் தகத்தை மருத்துவமனையாக்கும் செயற்குறிப்பு இல்லை என்றார்கள். அது தாலுக்கா தலைமையிடத்தில் அமைந் துள்ள மருந்தகம். அந்தக் கால்நடை மருந்தகத்திற்கு தினந்தோறும் அதிகமான கால்நடைகள் சிகிச்சைக்காக வருகின்றன. மருத்துவமனையாக இல்லாததால் போதுமான மருந்துகளும் இல்லை, டாக்டர்களும் போதுமான அளவில் இல்லை. அங்கேயுள்ள கட்டிடங்களும் மற்ற வசதிகளும், அதை ஒரு தாலுக்கா அளவிலான கால்நடை மருத்துவ மனையாக மாற்றுவதற்கான அடிப்படையைக் கொண்டது. ஆகவே மீண்டும் அதை அமைச்சர் மறுபரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டியில் செயல்பட்டு வரும் கால்நடை மருந்தகம், தற்போது மருத்துவமனையாக மாற்றப்படுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்தேன். அந்தக் கால்நடை மருந்தகத்தில் வருகிற கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாகத்தான் உள்ளது. தினந்தோறும் வரும் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால், மற்ற கால்நடை மருந்தகங்களை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்காகப் பரிசீலிக்கப்

படும்போது. திருத்துறைப்பூண்டி கால்நடை மருந்தகத்தையும் கால்நடை மருத்துவமனையாக உயர்த்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 533, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர்.

533—

மொடக்குறிச்சியில் மஞ்சள் அரவை ஆலை அமைத்தல்.

*3360—திருமதி கவிநிலவு தர்மராஜ் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மஞ்சள் உற்பத்தி அதிகமுள்ள மொடக்குறிச்சியில் ஒரு மஞ்சள் அரவை ஆலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

முற்பகல் 10.30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது,

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிந்து நடை செந்தமிழ் நாட்டில் சிங்க நடை போட்டு மங்களச் சின்னமாம் மஞ்சள் மகிமையால் தமிழகம் எங்கும் மொடக்குறிச்சி மாநகர் தமிழகத்திற்கு பெயர் சேர்த்துக்கொண்டிருக்கிற சூழ்நிலையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது இந்தத் திட்டம் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள்.